## 2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம்,
## திருவள்ளூர் @ பூந்தமல்லி

**முன்னிலை : திருமதி.கு.புவனேஸ்வரி, பி.எல்.,**
**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ஆம் நாள் வியாழக்கிழமை**

**இ.ம.எண்.2/2025 ன் அசல் வழக்கு எண்.337/2023**

திருமதி. மஞ்சுளா,

...மனுதாரர்/வாதி

..எதிர்..

1. திரு. கே. பாண்டுரங்கன்,
2. திருமதி. பி. கலாவதி,
3. திரு. பி. தினேஷ் பாபு,
4. திரு. பி. ரூபன் பாபு

... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த மனுவானது 15.07.2025 அன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. எம்.வி. சேஷாச்சாரி மற்றும் சி. ஹரினி ஆகியோர் ஆஜராகியும், 1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. எஸ்.கே. ஸ்வாமி, எம். யுவராஜ்,

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.18 10:59:54 +0530

எம். விஜயகுமார், அருணா மற்றும் கோகுல்ராம் ஆகியோர் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.எஸ். மனோகரன், எம். சுதாகர் மற்றும் என். ராஜேஷ் ஆகியோர் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலும் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்/வாதி தரப்பில் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் விதி 28(2) மற்றும் பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கின் விசாரணை தேதியை 24.07.2025ல் இருந்து இன்றைய தேதிக்கோ அல்லது அதற்கு முந்தையை தேதிக்கோ முன்னெடுக்க அனுமதித்து உத்தரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**:–

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவர். 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வாதியின் தந்தை, 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வாதியின் தாய் மற்றும் 4ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி வாதியின் இளைய சகோதரர் ஆகியோர் வழக்குக்குட்பட்ட நிலத்தில் கட்டிட பணிகளை மேற்கொண்டு

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.18 11:00:00 +0530

வருகின்றனர், வழக்கு சொத்தில் மனுதாரர்/வாதிக்கு பங்கு இருப்பதால், இந்த கட்டுமானம் தொடரும் பட்சத்தில் இந்த அசல் வழக்கின் சொத்து பாகப்பிரிவினையில் பங்கீட்டு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151ன் படியான மனுவை தாக்கல் செய்ய அசல் வழக்கின் விசாரணை தேதியை 24.07.2025ல் இருந்து இன்றைய தேதிக்கோ அல்லது அதற்கு முந்தையை தேதிக்கோ முன்னெடுக்க அனுமதித்து உத்தரவிட வேண்டும்.

3. **<u>1ம், 2ம் மற்றும் 4ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>:-**

எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் 1ம், 2ம் மற்றும் 4ம் பிரதிவாதிகள் ஆவர். முதல் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனக்கும் 2 மற்றும் 4வது பிரதிவாதிகளுக்கும் சார்பாகவும், மனுதாரர்/வாதி தாக்கல் செய்த மனுவில் உள்ள அனைத்து கூற்றுகளையும் மறுக்கிறார். 1ம் மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வழக்குச் சொத்திலிருந்து கிடைக்கும் குறைந்த அளவு வாடகை வருமானத்தையே முழுமையாக நம்பியுள்ள மூத்த குடிமக்கள் ஆவர். நடைபெற்று வரும் பழுதுபார்ப்புப் பணிகள், குடியிருப்பதற்கு ஏற்ற நிலையைப் பேணுவதற்கும், அவர்களின்

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.18 11:00:06 +0530

வாழ்வாதாரம் மற்றும் மருத்துவச் செலவுகளுக்கான அடிப்படை வருமானத்தைப் பெறுவதற்கும் அத்தியாவசியமானவை. இந்த அத்தியாவசிய பணிகளுக்கு தடை விதிப்பது, ஏற்கனவே வாழ்க்கையின் விளிம்பில் வாழ்ந்து வரும் பிரதிவாதிகளுக்கு சீரழிவு தரக்கூடிய தீங்கை விளைவிக்கும். எனவே, இந்த மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிருரை ஏதுமில்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டது.

**5. <u>தீர்வு செய்யப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>:–**

இம்மனுவில் கோரப்படும் பரிகாரம் அனுமதிக்கக் கூடியதா? என்பதாகும்.

**6.** இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும் முன்னிடப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. <u>பிரச்சனை:–</u>**

இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவர். மனுதாரர்/வாதி விளம்புகை, பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்து கட்டளை உத்தரவு பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கானது வா.சா.1ன் குறுக்கு

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.18 11:00:11 +0530

விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது. இதற்கிடையில் மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியான வாதியின் தந்தை, 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியான வாதியின் தாய் மற்றும் வாதியின் இளைய சகோதரர் 4ம் எதிர்மனுதாரரான/4ம் பிரதிவாதி ஆகியோர் வழக்குக்குட்பட்ட நிலத்தில் கட்டிட பணிகளை மேற்கொண்டு வருவதாகவும், வழக்கு சொத்தில் மனுதாரர்/வாதிக்கு பங்கு இருப்பதால், இந்த கட்டுமானம் தொடரும் பட்சத்தில் இந்த அசல் வழக்கு சொத்து பாகப்பிரிவினையில் பங்கீட்டு பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், எனவே, உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151ன் படியான மனுவை தாக்கல் செய்வதற்காக அசல் வழக்கின் விசாரணை தேதியை 24.07.2025ல் இருந்து முன்னெடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள பொருண்மைகளானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ள போதிலும் மனு சங்கதிகளை பரிசீலிக்கும் போது மனுதாரர் கோரியவாறு அசல் வழக்கில் கேட்புத் தேதியை முன்னெடுப்பதாலேயே எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்பட வாய்ப்பில்லை என்றும் அசல் வழக்கில் முழுமையான தீர்வு காணும் பொருட்டும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவை

G BHUVANESWARI
Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.18 11:00:18 +0530

அனுமதிப்பது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவில், இம்மனுவை அனுமதித்து அசல் வழக்கின் கேட்புத் தேதியை 24.07.2025 ல் இருந்து 18.07.2025 க்கு முன்னெடுத்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினிமயமாக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 17 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.18 11:00:23 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>– இல்லை**

G BHUVANESWARI

Digitally signed by G BHUVANESWARI
Date: 2025.07.18 11:00:29 +0530

**2 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**திருவள்ளூர் @ பூந்தமல்லி**

வரைவு/தெளிவு உத்தரவு
இ.ம.எண்.2/2025 ன்
அசல் வழக்கு எண்.337/2023
நாள் 17.07.2025
2 வது கூ.மா.அ.நீ., பூந்தமல்லி.